ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1782/29 - 2012 ඔක්තෝබර් මස 31 වැනි බදාදා - 2012.10.31

*1782/29 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம்

*134(1) ஆம் பிரிவின்கீழான தத்துவம்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின்கீழ் லங்காபுர பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச சபை பொதுக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணையினால் கூறப்படும் பிரதேசமானது 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின்கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக என்னால் அங்கீகரிக்கப்பட்டது என அறிவிக்கிறேன்.*

விராஜ் மேவின் பெரேரா,
உள்ளூராட்சிமன்ற உதவி ஆணையாளர்,
பொலன்னறுவை மாவட்டம்.

பொலன்னறுவை,
*2012.10.24.*

**அட்டவணை**

பிரேரணை


*32, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(1) ஆம் உப பிரிவிற்கு இணங்க லங்காபுர பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பின்வருமாறு விபரிக்கப்பட்டது தல்பொத்த நகரம் என்றழைக்கப்படும் -*

*வடக்கு : பொலன்னறுவை, சிங்கபுர வீதியின் 317 ஆம் சந்தியிலிருந்து ஆரம்பித்து சோமசிரி கடை வரை மத்திய கோட்டிலிருந்து மேற்குத்திசையில் 100 மீட்டர் அடங்கலாக) சென்று அவ்விடத்திலிருந்து ஹிங்குரக்கொடைக்குச் செல்லும் குறுக்கு வழிவரை (வடக்கு திசையில் 100 மீட்டர் அடங்கலாக) சென்று அவ்விடத்திலிருந்து வெலிஎல வீதி நெடுகிலும் இல. 141, 151 ஊடாகச் செல்லும் ஒழுங்கைக்குச் செல்லும் ஸ்தானம் வரை (மேற்குத் திசையில் 100 மீட்டர் அடங்கலாக) சார்ந்த எல்லையாகும் ;*

*கிழக்கு : 316 சந்தி அருகாமை பொலன்னறுவை சிங்கபுர வீதி நெடுகிலும் பிரதேச சபை பெயர்ப்பலகை அருகிலிருந்து 317 சந்தி வரை (மத்திய கோட்டிலிருந்து கிழக்குத் திசையில் 100 மீட்டர் அடங்கலாக) சார்ந்த எல்லை ;*

*தெற்கு : கலுவரகஸ் சந்தியிலிருந்து ஆரம்பித்து வாராந்த சந்தை அருகாமையிலிருந்து செல்லும் பிரதேச சபை வீதி நெடுகே பீரிஸ் கடை வரை சென்று அவ்விடத்திலிருந்து பொலன்னறுவை சிங்கபுர வீதி நெடுகே 316 சந்தி வரை (தென் திசையில் 100 மீட்டர் அடங்கலாக) சார்ந்த எல்லை ;*

மேற்கு : கலுவரகஸ் சந்தியிலிருந்து பொதுக்கிணறு வரையான பிரதேச சபை வீதி நெடுகே (மத்திய கோட்டிலிருந்து மேற்குத் திசையில் 100 மீட்டர் அடங்கலாக) சென்று அங்கிருந்து இல. 141, 151 காணிகள் ஊடாகச் செல்லும் ஒழுங்கை ஆரம்பிக்கும் ஸ்தானம் வரையாகும் (மேற்குத் திசையில் 100 மீட்டர் அடங்கலாக) ஆகிய எல்லைகளினால் சூழப்பட்டு உள்ளடக்கப்பட்டதும் பீஓ/எல்பீ/2009/146 நில அளவை மாதிரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள நிலப்பிரதேசத்தை அபிவிருத்தியடைந்த பிரதேசம் எனத் தெரிவுசெய்வதற்கு 2010.11.30 ஆந் திகதியன்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் டபிள்யூ. எம். எஸ். பீ. பீ. விஜேகோன் அவர்களால் கொண்டுவரப்பட்ட பிரேரணை இல. 32, கௌரவ பிரதேச சபை உறுப்பினர் கே. விஜேதுங்க அவர்களால் வழிமொழியப்பட்டது. அதன் பின்னர், கௌரவ தலைவர் மஞ்சுசிரி அலுத்வத்த அவர்களினால் சபையில் விடப்பட்டு அப்பிரேரணை சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.




11-647